# நான் மிகவும் நல்ல ஒரு தருணம் அனுபவித்துக் கொண்டேயிருந்தேன்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# ஏனெனில் அவருக்கு மறதி என்னும் கடல் ஒன்றுண்டு, நமக்கோ அது கிடையாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 64-12-27 இவர் யார் என்று சொல்லுகிறீர்கள்?

5 அநேக காரியங்கள் உள்ளன. நான்... புத்தாண்டை மறக்க நாம் அணுகிக் கொண்டிருக்கிறோம். அவைகளை நான் மறக்க முடிந்தால் நலமாயிருக்கும். **அவைகளைத் தவறுகளாக அவரிடம் அறிக்கை செய்துவிட்டேன், அவைகளை அவர் மறதி என்னும் கடலில் போட்டுவிட்டார் என்று அறிந்திருக்கிறேன். அவர் அதை இனி ஒருபோதும் நினைப்பதில்லை.** இப்பொழுது பாருங்கள், நாம் அந்த விதமாக உண்டாக்கப்படவில்லை. நாம் எப்பொழுதும் அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டேயிருப்போம். நாம் ஒருவரையொருவர் மன்

னிக்கக் கூடும். ஆனால் நாம் அதை மறப்பதில்லை. ஏனெனில் நாம் வித்தியாசமாக உண்டாக்கப்பட்டிருக்கிறோம். **ஆனால் தேவனுக்கோ அதை மன்னிக்கவும் மறக்கவும் முடியும். அது நடக்காதது போல் அதை துடைத்துவிட முடியும். பாருங்கள்? ஏனெனில் அவருக்கு மறதி என்னும் கடல் ஒன்றுண்டு, நமக்கோ அது கிடையாது. நாம் பாவம் செய்தோம் என்று தேவனுக்கு நினைவில் இல்லவே இல்லை என்பதை சற்று எண்ணிப் பாருங்கள்.** அதை சற்று எண்ணிப் பாருங்கள் பாடல் குழுவினரே, இளைஞர்களே, ஒருக்கால் அதைக் குறித்து என்ன? **நாம் பாவம் செய்தோமென்று அவர் நினைவு கூருவதேயில்லை, பாருங்கள், அவர் முழுவதையும் மறந்து விட முடியும். அது அவருடைய ஞாபகத்துக்கு இனி ஒருபோதும்**

**வராது.** அது மிகவும் நல்ல செயல் அல்லவா?

6 இது தமாஷ் பண்ணுவதற்கு இட மல்ல. எனக்கு தமாஷ் பண்ணுவதில் நம்பிக்கையில்லை... என் நண்பர் ஒருவர் என் நினைவுக்கு வருகிறார். அவர் இப்பொழுது மகிமைக்கு சென்றுவிட்டார். நகர்புறத்திலிருந்து நகரத்துக்கு தங்க வந்த தம்பதிகளைக் குறித்த ஒரு சிறு கதையை அவர் ஒருமுறை என்னிடம் கூறினார். அவர்களுக்கு ஒரு... இந்த இளம் தம்பதி களுக்கு வயது சென்ற ஒரு தகப்பன் இருந்தார். அவர் உண்மையில் தேவனுக் காக அனல் கொண்டிருந்தார். அந்த இளம் பெண் (அது அவளுடைய தகப்பன்)... அவர்கள் சில உயர் வகுப்பு மக்களிடம் தொடர்பு கொண்டனர். உங்களுக்குத் தெரி

யும், இந்த விதமான உயர்தர விருந் தோம்பல் போன்றவை. ஒருநாள் அவள் தன் வீட்டில் இத்தகைய விருந்தோம்பலை ஒழுங்கு செய்திருந்தாள்.

அவளுடைய தகப்பன் பகல் உண விற்கு பிறகு, வேதாகமத்தை எடுத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்று சிறிது நேரம் படித்துக் கொண்டிருப்பார். அதன் பிறகு அவர் வேதாகமத்தை கீழே வைத்து விட்டு, அழுது, கூச்சலிட்டு, கதறி, முழங் காலிலிருந்து எழுந்து, மூக்குக் கண்ணாடி யைப் போட்டுக்கொண்டு, மறுபடியும் வேதாகமத்தை படிப்பார். அதில் ஏதாவ தொன்றைக் கண்டு, அதை கீழே வைத்து விட்டு, அழவும் கூச்சலிடவும் தொடங்கு வார். அவள், “இது என் விருந்துக்கு இடையூறாக இருக்கும். எனவே நான் -

நான் - நான்... அப்பாவைக் குறித்து ஏதாவதொன்று செய்ய வேண்டும். என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரிய வில்லை'' என்று எண்ணினாள். அவள் அவரை மேல் மாடிக்கு அனுப்பிவிடுவ தென்று முடிவு செய்தாள்.

7 அவள், “அவரிடம் வேதாகமத்தைக் கொடுக்கக் கூடாது. கொடுத்தால் மேல் மாடியிலும் அதையே செய்வார்'' என்று எண்ணினாள். எனவே அவள் பூகோள புத்தகம் ஒன்றைக் கொடுத்து, ''அப்பா, நாங்கள் விருந்துண்ணும் போது, நீங்கள் உலகப் படங்களை பார்த்துக் கொண்டிருங் கள்'' என்று சொல்லி அவரை மேலே அனுப்பிவிட்டாள். அவள் தொடர்ந்து ”எங்களுக்கு அதிக நேரம் பிடிக்காது. நாங்கள் கீழே... சிறிது நேரம் கழித்து கீழே

வந்துவிடுங்கள். ஸ்திரீகள் உள்ள இடத்தில் உங்களுக்கு இருக்கப்பிடிக்காது என்று எனக்குத் தெரியும்'' என்றாள்.

அவர், ''தேனே, பரவாயில்லை. நான் மேலே செல்கிறேன்'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

எனவே அவர்... அவள் அவருக்கு ஒரு விளக்கையும் ஒரு இடத்தையும் ஒழுங்கு படுத்திக் கொடுத்தாள். அவள், ''இத்துடன் தொல்லை முடிந்தது. அவர் படங்களைப் பார்த்து விட்டு, சிறிது பூகோளம் படிப்பார், அதன்பிறகு சிறிது நேரம் கழித்து அவர் கீழே இறங்கி வருவார். எல்லாம் சரியாகி விடும்" என்று எண்ணினாள்.

8 அவர்கள் 'பிங்க்' நிற எலுமிச்சை சாற்றைக் குடித்துக் கொண்டு, விருந்தை நடத்திக் கொண்டிருந்த நடுவில் சிறிது நேரம் கழித்து வீடு அதிர ஆரம்பித்தது. கிழவர் கூச்சலிட்டும் குதித்துக் கொண்டும் அறைக்குள் இங்கும் அங்கும் ஓடினார். அவள், ''அவருக்கு என்ன நேர்ந்தது? அவரிடம் வேதாகமம் இல்லையே... அவருக்கு எப்படியாவது வேதாகமம் கையில் கிடைத்திருக்கும்'' என்று எண்ணினாள்.

அவள் படிக்கட்டுகளில் ஓடிச்சென்று, “அப்பா, நீங்கள் படிப்பது வேதாகமம் அல்ல, அது பூகோளப் புத்தகம்'' என்றாள்.

அவர், “தேனே, எனக்குத் தெரியும். அன்றொரு நாள் நான் வேதாகமத்தில் இயேசு நம்முடைய பாவங்களை மறதி

கடலில் போட்டுவிடுவதாகவும் அதை இனி ஒருபோதும் நினையாதிருப்பதாக வும் கூறியுள்ள பாகத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். சில இடங்களில் அவர்கள் கடலின் கடையாந்தரங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்று இந்த பூகோளப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. சற்று யோசித்துப் பார். அது போய்க் கொண்டேயிருக்கிறது'' என்றார்.

அது அவரை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. எனவே நீங்கள் எங்கு பார்த்தாலும் தேவ னைக் காணலாம். பாருங்கள், நீங்கள் சுற்றி லும் நோக்கினால், எல்லாமே அவரைக் குறித்து பேசும்.



நீங்கள் மரித்திருக்கிறீர்கள், அதை அறியாமலும் இருக்கிறீர்கள். ஆம், ஓ, சித்திர வர்ணம் பூசப்பட்ட உங்கள் ஆலய ஜன்னல்கள் என்னத்திற்கு? மெத்தென்ற பூம்பட்டினால் செய்யப்பட்ட சொகுசான இருக்கைகள் என்னத்திற்கு? உங்களுடைய பெரும் திரளான மக்கள் கூடுகிற உங்கள் சபைதான் என்னத்திற்கு?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-12-11E லவோதிக்கேயா சபையின் காலம்

162. ''நான் ஐசுவரியவான், எனக்கு ஒரு குறைவுமில்லை'' நிச்சயமாக அப்படித் தான் உள்ளது. எது அவசியம் தேவையா யிருக்கிறதோ அது உன்னிடம் இருக்க வில்லை. ஆம் அதை நீ அறியாமலிருக் கிறாய். ''ஐசுவரியவானும், ஒரு குறைவு மில்லை யென்றும் என்று இருக்கும் நிலை யைப் பாருங்கள். சீட்டு விளையாட்டு போன்ற காரியங்களில் சபையிலேயே ஈடுபட அவர்களுக்கு பணம் செலவழிக் கப்படுகிறது. ''எங்களுக்கு பெரிய சபை இருக்கிறது" என்று கூறுகிறீர்கள். ஆம் ஐயா, நிச்சயமாக அப்படித்தான் இருக்

கிறது. இருப்பதிலேயே பெரிய சபைதான். ''நல்லது, இந்நகரத்தின் மேயராக இருப்பவரே எங்களது சபைக்குத் தான் வருகிறார் என்பது உங்களுக்கத் தெரியுமா?'' என்று கேட்கின்றனர். “இன்ன பிரமுகர் கூட, அவர்கள் நகருக்கு வருகை தரும் போது, எங்களுடைய சபைக்குத் தான் வருகிறார்கள்'' என்கிறீர்கள்.

163. ஆம், பரிசுத்தவான்களான தரித்திரரும், தேவை உள்ளோரும் சபைக்குள் வரட்டும் பார்க்கலாம். அவர்கள் வந்தால் அது உங்களுக்கு ஒரு கண்டனமாக இருக்கிறது. அவர்கள் அங்கே இருப்பதையே நீங்கள் விரும்பவில்லை. அப்படிப்பட்டவர்கள் வந்து விட்டால், நீங்கள் பிரசங்கம் பண்ணும்போது, "ஆமென்'' என்று சப்தமிடுவர்களே என்று அஞ்சுகிறீர்கள்.

164. இங்கே ஒரு புத்தகத்தில், ஒரு ஆலயத்தினுள் வந்திருந்த ஒரு எளிய பெண்மணியைக் குறித்து நான் வாசித் திருக்கிறேன். அவள் ஒரு சபைக்குள் வந்தாள். அவள் தன் பிள்ளைகளை தூர மான காட்டுப் பிரதேசங்களிலே, உண்மை யான தேவதாபக்தியுள்ளவர்களாக, பழைய பாணியிலான ஆவிக்குரிய சபை யில் வளர்ந்து ஆளாக்கியிருந்தாள். அவ ளது மகள் ஒருத்தியை ஒரு நாள், ஒரு வாலிபன் வந்து விவாகம் செய்து கொண்டு போனான். அவன் பெரிய நகரம் ஒன்றில் அப்பெண்மணி சார்ந்திருந்த அதே ஸ்தா பனத்தைச் சேர்ந்த ஒரு பெரிய சபையைக் சேர்ந்தவனாக இருந்தான். எனவே, அவன் அப்பெண்ணின் தாயிடம், தான் ஒரு கிறிஸ்தவன் என்று கூறி விட்டு, அவளது

மகளை விவாகம் செய்து கொண்டு, அழைத்துச் சென்றுவிட்டான்.

165. அவன் இறுதியாக, அப் பெண்ணை நாட்டுப் புறங்களிலிருந்து விவாகம் செய்து கொண்டு, தான் வாழும் நகரத்திற்கு அழைத்துச் சென்றபோது, அவள் சார்ந்திருந்த அதே பெயருள்ள நாட்டுப்புற சபையில் இருந்த வந்த நல்ல காரியங்களையெல்லாம் அவளை விட்டு மறக்கடித்துப் போட்டு, நகரில் இருந்த அதே பெயருள்ள தான் அங்கம் வகிக்கும் சபைக்குரியவளாக அவளை மாற்றிப் போட்டான். அவள் முன்பு சார்ந்திருந்த அந்த நாட்டுப் புறத்து சபையில் பரிசுத்த ஆவி உண்டாயிருந்தது. ஆனால் நகரில் இருந்த அதே சபையில் பரிசுத்த ஆவியே இல்லை. எனவே, அவர்கள் இப்பொழுது

அந்த பெரிய அருமையான சபையில் வந்து விட்டார்கள்.

166. ஒரு நாள் அப்பெண்ணின் தாயார் தன் மகளை பார்த்து விட்டு போக விரும்புவதாக தெரிவித்திருந்தாள். அவள் வந்தால், அவளை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று மகளும் மருமக னும் திகைத்தார்கள். எனவே, அவள் குறிப்பிட்ட நாளில் வந்தபோது ஏதோ பழங்காலத்து நினைவுச் சின்னத்தைப் பற்றி விவரிக்கும் புத்தகத்தில் கூறப்பட்ட ஒரு நபரைப் போன்ற அவர்களுக்கு காட்சி யளித்தாள். ஏனெனில் அவள் அணிந் திருந்த உடை கழுத்து வரையிலும் உயரமாக உள்ள காலர் உள்ளதாகவும், முழுக்கை உடையதாகவும் இருந்தது. அவளது தலை முடியானது பின்னால்

நீண்டு தொங்கிக் கொண்டு இருந்தது. தலையை உரித்த வெங்காயத்தைப் போல், நன்கு மழித்துச் சீவியிருந்தாள். அவள் வந்தபோது, "நல்லது அல்லேலூயா, அன்பே, நீங்கள் எல்லாம்; எப்படியிருக் கிறீர்கள்?" என்று கேட்டாள். மேலும், "இன்று ஞாயிற்றுக் கிழமை காலையா யிற்றே, நீங்களெல்லாம் ஆராதனைக்குப் போவீர்களல்லவா?" என்றாள்.

167. மகளுடைய புருஷன், மகளிடம், “இவளை நாம் என்ன செய்யலாம்? இப்படிப்பட்ட இவளை நாம் அங்கெல் லாம் அழைத்துச் செல்லக் கூடாது, என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை'' என்று கூறினான். அவன், "அம்மா, நாங் கள்... நான் உங்களுக்கு கூறுகிறேன்...'' என்றான்.

168. "என்னால் ஆலயத்திற்குப் போகாமல் இருக்க முடியாது. நான் அங்கே அந்த மூலையில் இன்ன சபையொன்றைப் பார்த்திருக்கிறேன். நான் போய் ...'' என்று தாய் கூறினாள்.

169. ''ஓ, நல்லது, வேறு வழியில்லை, அழைத்துக் கொண்டு தான் போவோமே” என்றான் அவன்.

170. ஆகவே, அப்பெண்மணியை அழைத்துக் கொண்டு சபைக்கு வந்த பொழுது, அவளைப்பற்றி வெட்கமாக நினைத்தபடியால், அவளை முதலில் உள்ளே போக விட்டுவிட்டார்கள். இங்கே அவள் தெருவில், அந்த நீண்ட ஆடையை அணிந்து கொண்டு, தன் அக்களத்தில் வேதாகமத்தை சுமந்து கொண்டு வந்தாள். ஆனால் சகோதரனே, ஒருவேளை உலகில்

உள்ள பெரிய தலைவர்கள் பிரமுகர்கள் ஆகியோரைப் பற்றிக் கூறும் “இன்னார் இன்னார்'' புத்தகத்தில் அவளது பெயர் இடம் பெறாமல் இருக்கக்கூடும். ஆனால் அவளது பெயர் ஆட்டுக்குட்டியானவரிள் ஜீவ புஸ்தகத்தில் இடம் பெற்றிருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதுவே முக்கியமான காரியமாயிருக்கிறது.

171. அவள் சபையினுள் நுழைந்த போது, அங்கே பின்னால் ஒரு ஆசனத்தில் அமர்ந்தாள். பிறகு தனது வேதாகமத்தை திறந்து அதைப் படிக்க ஆரம்பித்தாள். அங்கிருந்த யாவரும் அவளையே வெறிக் கப் பார்த்து, ஏதோ ஒரு பழங்காலத்து நினைவுச் சின்னம் தான் எங்கிருந்தோ இங்கு தப்பித் தவறி வந்துவிட்டதோ என்று நினைத்தார்கள். அவர்களோ லவோ

திக்கேயா காலத்திற்கு எடுத்துக்காட்டாய், மிகவும் எடுப்பான ஆடைகளை அணிந்த வர்களாய் அங்கே அமர்ந்திருந்தார்கள். அவர்கள் பின்னால் திரும்பிப் பார்த்து, அப்பெண்மணி தன் முகத்தில் பெரிய புன்முறுவலோடு வேதத்தை வாசித்துக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள்.

172. சபைப்போதகர், ஆராதனையின் ஏனைய சடங்குகளையெல்லாம் முடித்து விட்டு, கடைசியாக பதினைந்து நிமிட பிரசங்கத்திற்காகத் தான் அவருக்கு நேரம் இருந்தது. எனவே அவர் அதற்காக எழும்பி நின்று, "கர்த்தர் நல்லவர்'' என்று கூறி ஆரம்பித்தார்.

173. "தேவனுக்கு ஸ்தோத்திரம். அது சரிதான், அல்லேலூயா'' என்று அப்பெண்

மணி சப்தமிட்டாள். உடனே யாவரும் ஆண்வாத்துக் கோழியைப் போல் தங்கள் கழுத்துக்களை சுற்றுமுற்றும் பார்த்து நீட்டி, "யார் அது?" என்றார்கள்.

174. சற்று நேரம் கழித்து, போதகர், "ஹூம் ஹூம்'' என்றார். அவர் மேலும் தொடர்ந்து, ''ஒவ்வொரு காலத்திலும் கிறிஸ்தவர்கள், தீரமிக்க மகத்தான அருமையான கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும்'' என்று கூறினார். இவ்வாறு இன்னும் சில காரியங்களையும் கூறினார்.

175. "அதுவே சரி தேவனுக்கு ஸ்தோத்திரம்'' என்று அவள் மீண்டும் கூறினாள். அவர்கள் யாவரும் சற்றும் முற்றும் பார்த்தார்கள்.

176. போதகர், "ஹூம்" என்று கூறிவிட்டு, உதவிக்காரர்கள்( டீக்கன்கள்) குழுவை அர்த்தத்துடன் நோக்கிப் பார்த்தார்.

177. அந்த உதவிக்காரர் குழுவுக்கு போதகர் என்ன சமிக்ஞை தெரிவிக்கிறார் என்பதை புரிந்து கொண்டார்கள். அவர்கள் பின்னால் போய், அந்தப் பெண்மணியை கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய், ஆலய வாசலுக்கு வெளியே கொண்டுபோய் விட்டு, "நீ போதகருக்கு இடையூறு செய்கிறாய்" என்று கூறினார்கள்.

178. **நீங்கள் மரித்திருக்கிறீர்கள், அதை அறியாமலும் இருக்கிறீர்கள். ஆம், ஓ, சித்திர வர்ணம் பூசப்பட்ட உங்கள் ஆலய ஜன்னல்**

**கள் என்னத்திற்கு? மெத்தென்ற பூம்பட்டி னால் செய்யப்பட்ட சொகுசான இருக்கை கள் என்னத்திற்கு? உங்களுடைய பெரும் திரளான மக்கள் கூடுகிற உங்கள் சபைதான் என்னத்திற்கு?** மார்ட்டின் என்ற ஒரு வகைப் பறவை எவ்வாறு தன்னுடைய கூண்டிலேயே தன் அழிவை அடைந்து விடுகிறதோ, அவ்வாறு நேராக நீங்கள் நரகத்துக்கு தான் போகப்போகிறீர்கள். **உங்களிடத்தில் தேவனுடைய ஆவி இல்லை யெனில் நீங்கள் கைவிடப்படுவீர்கள். நீங்கள் மறுபடியும் பிறவாவிடில் தேவனுடைய இராஜ் யத்தைக் காண முடியாது.**


179. அவ்வாறு கூறுவது கசப்பாகத் தான் இருக்கும். அது நான் விளக்கெண் ணெய் குடிக்கும் வழக்கம் உண்டே, அதைப் போல் இருக்கிறது. நான் தாயிடம்,

"அம்மா, என்னால் அதை சகிக்கவே முடியவில்லை" என்று விளக்கெண்ணெய் குடிப்பதைப் பற்றிக் கூறுவதுண்டு.

180. "உனக்கு விளக்கெண்ணெய் குடிப்பது கஷ்டமாக இருக்காவிடில், அது உனக்கு நன்மை பயக்காது'' என்று என் தாய் கூறுவார்கள். இந்த பரம காரியமுங் கூட அந்த விதமாகத்தான் இருக்கிறது என்ற நான் நினைக்கிறேன்.



நான் மரத்தைச் சுற்றி சுற்றி வந்து "தேவனுக்கு மகிமை ! கர்த்தருக்கு ஸ்தோத்திரம் !" என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தேன். நான் எனக்குள் அருமையான தருணம் அனுபவித்துக் கொண்டிருந்தேன், கர்த்தரும் நானும் மட்டுமே.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #21

உங்களுக்கு என்னவென்று தெரியுமா, அன்றொரு நாள் அந்த கழுகின் செட்டை களில் உள்ள உணர்வை நான் கவனித்துக் கொண்டிருந்தேன், அது உங்களுக்குத் தெரி யும். நான், “உனக்கு என்னை பயமில் லையா?” என்று நினைத்துக் கொண்டேன். நான் துப்பாக்கியை நிறுத்தி வைத்திருந்தேன். நான், "என்னால் உன்னை சுட்டு விழ்த்த முடியும்" என்றேன். அதை என்னால் சுட்டு வீழ்த்த முடியும் என்று அது அறிந்திருந்தது; நான் அந்த துப்பாக்கிக்கு அதிக தூரத்தில் இருந்தேன். நான், "உனக்கு பயமாயிருக் கிறதா?" என்றேன். அது தன் பெரிய கண்களினால் என்னை முறைத்துப் பார்த்தது. அங்கு ஒரு சிறு குரங்கு உட்கார்ந்து கொண்டு "சா, சா, சா, சா, சா; உன்னை

நான் துண்டு துண்டாக கிழித்து விடுவேன் என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தது. அந்த கழுகு அந்த குரங்கு போட்ட சத்தத்துக்கு எந்த கவனமும் செலுத்தவில்லை. அது போடும் சத்தத்தைக் கேட்டு அதற்கு அலுத்துப்போனது. எனவே சற்று கழிந்து, அது தன் செட்டைகளை விரித்து ஒரு சுற்று சுற்றி வந்தது அதன் செட்டைகளை எவ் விதம் உபயோகிப்பது என்பதை அது அறிந்திருந்தது. அது பறந்து, கண்ணுக் கெட்டாத உயரத்துக்கு சென்று விட்டது. பாருங்கள்? அது ஒரு சிறு உருவமாக, ஒரு சிறு புள்ளி போல் ஆவதை நான் கவனித்துக் கொண்டேயிருந்தேன்.

**334.** சகோ. ஃபிரட், நான் உங்களுக்குக் காண்பித்தேன் என்று நினைக்கிறேன். சகோ ஃபிரட் பின்னால் உட்கார்ந்து கொண்டு "ஆமென்" என்று சற்று முன்பு சத்தமிட்ட போது, அவர் அங்கு உட்கார்ந்திருப்பதை கண்டேன். மலையின் உச்சியில் இது நடந்த

இடத்தை உங்களுக்கும் சகோ. வுட்டுக்கும் அவர் இப்பொழுது எங்கிருந்தாலும் காண் பித்தேன் என்று நினைக்கிறேன். அந்த கழுகை நான் கண்டேன்... புயல் அடித்த தனால் அது இறங்கி வருவதற்கு நிர்ப்பந்தம் உண்டானது. நான் அங்கிருந்த ஒரு மரத்தின் பின்னால் நின்று கொண்டிருந்தேன்.

***335.*** சற்று கழிந்து நான் கலைமான் வேட்டையாடினேன். அது அக்டோபர் மாதம், பனி பெய்து கொண்டிருந்தது. இங் குள்ள சகோ. ஜானும் மற்றவர்களும் சென்ற இலையுதிர் காலத்தின் போது எங்களுடன் அங்கு வந்திருந்தனர். அந்த இடம் கோரல் சிகரத்தின் உச்சியில் இருக்கிறது.

***336.*** அங்கு நான் ஒரு மரத்தின் பின்னால் நின்று கொண்டிருந்தேன். சிறிது பனி பெய்கிறது, சிறிது மழை பெய்கிறது மாயிருந்தது. அங்கு நான் நின்று கொண் டிருந்தேன். அது கீழே இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அது அங்கு பறந்து

கெண்டிருந்தது. மிகப் பெரிய உருவம் படைத்த பழுப்பு நிறக் கழுகு. அது ஒரிடத்தில் உட்கார்ந்து சுற்று முற்றும் பார்த்தது நான், "நல்லது..." என்று எண்ணி னேன். நான் மிகவும் நல்ல ஒரு தருணம் அனுபவித்துக் கொண்டேயிருந்தேன். நான் "கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அல்லேலூயா" என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தேன். நான் மரங்களைச் சுற்றி சுற்றி வந்து அவ்வாறு கூச்சலிட்டுக் கொண்டிருந்தேன். நான் அங்கு பார்த்தேன். அப்பொழுது ஓநாய் ஊளை யிடும் சத்தத்தைக் கேட்டேன். அவைகள் எவ்வாறு ஊளையிடும் என்று உங்களுக்குத் தெரியும்.

*337.* சென்ற ஆண்டு அங்கு நான் சென்றிருந்த போது, மழை பெய்யத் தொடங்குவதற்கு சற்று முன்பு, அவைகள் ஊளையிடத்தொடங்கின; அந்த ஊளையிடும் சத்தத்தைக் கேட்க எனக்கு மிகவும் பிரியம்.

*338.* மற்ற பக்கத்தில் கலைமான் "வீஹீ" என்று இடும் சத்தத்தை நான் கேட்டேன் (சகோ. பிரன்ஹாம் கலைமான் சத்தமிடுவது போல சத்தமிடுகிறார் - ஆசி). அவை அப்படித்தான் சத்தமிடும். உடனே அதன் ஜோடி மற்ற பக்கத்தில் சத்தமிட்டு பதி லளிக்கும். (அடுத்த வாரம், அதற்கும் அடுத்த வாரம், கர்த்தருக்குச் சித்தமானால் அவை களை வேட்டையாடச் செல்வேன்). எனவே, இச்சத்தத்தை அங்கு கேட்கும் போது, ஓ அங்கு தெய்வீகப் பிரசன்னமாக இருக்கும். ஓ, நான்... அங்கு தான் என் ஆலயம் உள்ளது. அங்கு நான் அவருடன் உரையாடி விட்டு, பிறகு கீழே இறங்கி வந்து, உங்க ளிடம் பேசுகிறேன். பாருங்கள்?

*339.* அங்கு மேலே, ஓ, அது மிகவும் அற்புதமாயுள்ளது, அங்கு நான் நன்றாக இளைப்பாறுகிறேன். அங்கு நின்று கொண்டு நான், "ஓ, தேவனே..." என்று எண்ணினேன். நான் பார்த்த போது, மழை பெய்யத்

தொடங்கினது, பசுமையானவைகளின் மேல் பனி உறைந்திருந்தது, ஒரு வானவில் கோரல் சிகரத்திலிருந்து ஆட்டு மலை வரைக்கும் வானத்தில் அவ்வளவு பெரிதாக வியாபித்திருந்தது. "ஓ, தேவனே, இங்கு பாரும், உம்" என்று எண்ணினேன். நான், "இதோ நீர் அல்பாவும் ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறீர். இதோ அது இங்கே அங்கே கீழே வந்திருக்கிறது. நீர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறீர், நீரே ஏழு சபையின் காலங்கள், ஏழு பொன் குத்து விளக்குகள். அதிலெல்லாம் நீர் இருக்கிறீர். தேவனே, நீர் எவ்வளவு அற்புதமானவர்" என்று எண்ணினேன்.

***340.*** நான் இவ்வாறு சத்தமிட்டுக் கொண்டே என் துப்பாக்கியை கீழே வைத்தேன். நான் மரத்தைச் சுற்றி சுற்றி வந்து "தேவனுக்கு மகிமை! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தேன். நான் எனக்குள் அருமையான தருணம்

*அனுபவித்துக் கொண்டிருந்தேன், கர்த்தரும் நானும் மட்டுமே.*

***341.*** *சிறிது நேரம் கழித்து அந்த கழுகு புதர்களுக்கு வெளியே வந்து என்னை முறைத்தது. "என்ன நான் சத்தமிடுவது உனக்குப் பிரியமில்லையா?" என்று எண்ணி னேன். நான், "கழுகை உண்டாக்கின அதே தேவனைத் தான் நான் தொழுது கொண் டிருக்கிறேன்" என்றேன். பாருங்கள்? அது தன் பெரிய சாம்பல் நிறக் கண்களை சிமிட்டி, அவ்விதம் சத்தமிட்டுக் கொண் டிருக்கிற என்னை உற்றுப் பார்த்தது.*

***342.*** *ஒரு சிறு அணில் (யாராகிலும் எப்பொழுதாகிலும் மலைகளில் வேட்டை யாடி இருந்தால், அதுதான் காட்டுக்கு போலீஸ்காரன்) அங்கு ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு தாவிக் கொண்டிருந்தது (பெரிதாக ஒன்றும் செய்வதற்கான ஒரு அமைப்பை அது பெற்றிருக்கவில்லை, ஆனால், ஓ, என்ன கூச்சல்). அது மேலும்*

கீழும் தாவிக் கொண்டு, "யா, யா, யா, யா, யா" என்று தொடர்ந்து சத்தமிட்டுக் கொண்டிருந்தது.

*343.* கழுகு அதை கவனித்துக் கொண்டிருந்தது; அதன் பிறகு அது என்னை உற்றுப் பார்த்தது. நான், "என் தேவனே, அப்படிப்பட்ட ஒன்றிற்காக நான் துதிப்பதை நீர் நிறுத்தின காரணம் என்ன? உம்மை நான் தொழுது கொண்டிருந்தேனே. அந்த கழுகில் நான் ஒன்றைக் காண வேண்டுமென்று நீர் விரும்புகிறீரா? அப்படியானால் நான் அதை ஆழ்ந்து படிப்பேன். அல்லது அணிலைக் கண்டு நான் ஒன்றை அறிந்து கொள்ள வேண்டுமா?" என்று கேட்டேன். அங்கு நான் நின்று கொண்டு இரண்டையும் கூர்ந்து கவனித்தேன். "சரி, இந்த கழுகை சற்று ஆராய்ந்து பார்க்கலாம்" என்று எண்ணினேன். அதில் நான் கண்ட ஒரு காரியம், அதற்கு பயமேயில்லை. அது எனக்குப் பிரியம், அது எதற்கும் பயப்படுவதேயில்லை.

அந்த பெரிய பறவை அங்கு நின்று கொண்டிருந்தது. நான் அதனிடம் "உனக்குத் தெரியுமா?" என்றேன். (என் துப்பாக்கி ஒரு மரத்தில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது). நான், "உன்னை என்னால் சுட்டு விழ்த்த முடியும் என்று உனக்குத் தெரியுமல்லவா?" என்றேன். அதற்கு அதைக் காட்டிலும் அதிகம் தெரியும். அதற்கு ஒரு காரியம் தெரியும், அதாவது அதை நான் செய்ய மாட்டேன் என்று. அதை நான் அதிகமாக மனதில் பாராட்டிக் கொண்டிருந்தேன். பாருங்கள்? அது அங்கு நின்று கொண் டிருந்தது, அது சிறிதும் கூட பயப்பட வில்லை.

*344.* "உன்னை என்னால் சுட்டு வீழ்த்த முடியும்" என்று எண்ணினேன். இப்பொழுது, அதை நான் கவனித்துக் கொண்டே வந் தேன். அது என்னை இப்படி உற்றுப் பார்க்கும், பிறகு செட்டைகளை இப்படி விரிக்கும், அது உங்களுக்குத் தெரியும்.

கழுகுகள் தங்கள் செட்டைகளை எப்படி விரிக்குமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். பெரிய அகலமான செட்டைகள், இவ்வளவு நீளம். அது பெரிய உருவம் படைத்ததா யிருந்தது. அது அங்கு உட்கார்ந்து கொண் டிருந்தது. அதை நான் உற்று நோக்கினேன். (இது இவைகளை நான் அறிந்து கொள் வதற்கு அநேக ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம், ஒருக்கால் இருபது ஆண்டு களுக்கு முன்பு இருக்கலாம்).

*345.* அதை நான் கவனித்தேன்; சிறிது கழிந்து அதை நான் பார்த்தேன். "அது என்ன அது என்ன... அதற்கு பயமேயில்லை, அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அந்த கழுகுக்கு என்ன தேவ அம்சம் உள்ளது?" என்று நினைத்துக் கொண்டேன். அதன் பெரிய அலகு இப்படி வெளியே வந்து, அதன் கண்களும் பெரிதாயுள்ளன. நான், "அது உண்மையில் ஒரு கம்பீரமான பறவையே" என்று எண்ணினேன்.

***346.*** *இப்பொழுது. யாருமே. ஒரு பருந்து அதைப் பின்தொடர முயன்றால், அது சுக்குநூறாகிவிடும். அதை எதுவுமே பின் தொடர முடியாது. இல்லை, இல்லை! அதை ஒரு விமானம்தான் செய்ய முடியும். அது மிகவும் உயர பறக்கிறது. பிறகு, அதன் கண்களால் அது உயரத்திலிருந்து தரை வரைக்கும் காண முடியும், அவ்வளவு தொலைவிலிருந்து.*

***347.*** *இப்பொழுது யேகோவா தம் தீர்க்கதரிசிகளை கழுகுகளுக்கு ஒப்பிடுகிறார் (பாருங்கள்?) அவர் அவர்களை இப்படி உயர தூக்குகிறார். அவர்கள் விசேஷமாக உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும். நாம் பார்ப்போம். முன் குறிக்கப்பட்டு, அந்த நோக்கத்துக்காக பிறந்து (பாருங்கள்?), இப்படி மேலே உயர்த்தப்படுகின்றனர். அதன்பிறகு நீங்கள்... நீங்கள் எங்கிருக் கிறீர்கள் என்று உங்களால் காண முடியாமல் போனால், அங்கு நீங்கள் போவதனால்*

*என்ன பயன்? பாருங்கள்? நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று அறியாமல் போனால் அந்த இடத்துக்கு போவதனால் என்ன பயன்? பாருங்கள், பாருங்கள்?*

***348.*** *நீங்கள் மேலும் கீழும் குதித்து, கூச்சலிட்டு, அந்நிய பாஷைகள் பேசினாலும், இதெல்லாம் என்னவென்று நீங்கள் அறியாமல் போனால் என்ன பயன்? பாருங்கள், பாருங்கள்? நீங்கள் அங்குள்ளபோது, நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். பாருங்கள்?*

***349.*** *எனவே, அந்த கழுகை நான் கவனித்துக் கொண்டிருந்தேன். அது அங்கு அசைந்து கொண்டிருந்தது. அதை நான் கண்டு ரசித்தேன்; அது மிகவும் அழகான பறவை. இருப்பினும், அது ஒருக்கால் நான் கொன்ற மான் மாம்சத்தைப் புசிக்கும் என்று எண்ணினேன். அதை நான் கவனித்துக் கொண்டேயிருந்தேன். சற்று கழிந்து நான்,*

"உங்களுக்குத் தெரியுமா? அது என்ன..." என்று எண்ணினேன்.

*350.* சிறிது கழிந்து அதற்கு களைப் புண்டானது. அது என்னைப் பார்த்துக் கொண்டிருந்ததனால் அதற்கு களைப்புண் டாயிற்று என்று எனக்குத் தோன்றவில்லை. அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த அந்த குரங்கு போட்ட சத்தத்தைக் கேட்டு தான் அதற்கு அலுப்பு உண்டாயிற்று என்று எனக்குத் தோன்றினது. இன்று பாளையத்தில் நம்மிடையே அத்தகைய அநேக குரங்குகள் உள்ளன. பாருங்கள்? "சா, சா, சா! அற்புதங்களின் நாட்கள் கடந்துவிட்டன! தெய்வீக சுகம் பெறுதல் என்பது கிடையாது, இவையெல்லாம் இப்பொழுது கிடையாது" பாருங்கள்? பூமிக்குரிய அந்த குரங்கு மரத்தின் கிளையில் உட்கார்ந்து கொண்டு, "நீ இதை சேர்ந்திருக்க வேண்டும். நாங்கள் - நாங்கள் - நாங்கள்தான்." என்று சத்தமிட்டுக் கொண்டிருக்கிறது. பாருங்கள், பாருங்கள்.

அங்கு உட்கார்ந்து ஓயாமல் சத்தமிட்டுக் கொண்டிருக்கிறது. ஓ, அதன் உடல் அசைந்தது, அது தன் உடலை அதிகமாக குலுக்கினது.

*351.* குரங்கு இடும் சத்தத்தைக் கேட்டு அதற்கு அலுத்துப் போனது. அது அங்கிருந்து ஒரு பெரிய தாவு தாவினது, அப்படிச் செய்தபோது அது உட்கார்ந்து கொண்டிருந்த மரக்கிளையை அது அசைத்தது. மரக்கிளை அசைந்தது. அது அங்கிருந்து பறந்து சென்றது. பாருங்கள், அது செட்டைகளை அடித்துக் கொண்டு அந்த மரத்திலிருந்த இடைவெளி வழியாய் பறந்து சென்றது. அது அவ்விதம் செய்த போது, அதை நான் கவனித்தேன். பாருங்கள்? அது பயப்படவேயில்லை. ஏனெனில் தேவனால் அதற்கு அளிக்கப்பட்ட அந்த செட்டைகளின் பிரசன்னத்தை அதனால் உணர முடிந்தது. அந்த செட்டைகள் அதை எந்த விதமான ஆபத்

*திலிருந்தும் விலக்கிக் கொண்டு செல்லும் என்பதை அது அறிந்திருந்தது. பாருங்கள்?*

***352.*** *எனவே, அந்த விதமாகத்தான் நாமும் உணர விரும்புகிறோம். இதுதான் வார்த்தை; இந்த வார்த்தையை எழுதினவரே என் செட்டைகள். வார்த்தையைக் குறித்து எனக்கு பயமில்லை; அது உங்களை எந்த ஆபத்தின் வழியாகவும் கொண்டு செல்லும். அது ஒரு பட்டயம், அது வெட்டி வழியை உண்டாக்கிக் கொண்டே செல்லும். அதைக் குறித்து நீங்கள் கவலைப்படவே வேண்டாம். பாருங்கள்?*

***353.*** *அதன்பிறகு, அதை நான் கவனித் தேன். அது செட்டைகளை அடிக்கவில்லை, அது செட்டைகளை விரித்தது. பாருங்கள்? ஒவ்வொரு முறையும் காற்று அடித்த போது, அது உயர உயர சென்றது. அங்கு நான் நின்று கொண்டு, கைகளை கட்டின வண்ண மாய், அது சிறு புள்ளி போல் ஆகி*

*என்னால் காண முடியாமல் போனவரைக்கும் அதையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். "தேவனே, அதுதான். ஓடிப் போய் இதை சேர்ந்துகொள், அதை சேர்ந்து கொள், இதை, அதை, மற்றதை செய் என்றல்ல அது; அது செட்டைகளை விரித்தல் மட்டுமே (பாருங்கள்?); விசுவாசம் என்னும் உங்கள் செட்டைகளை தேவனுடைய வார்த்தைக்குள் எவ்விதம் பொருத்துவது என்பதை அறிந் திருந்து, இங்கும் அங்குமுள்ள இந்த அர்த்த மற்ற வீண் பேச்சுகள் அனைத்தினின்றும் பறந்து செல்வதே" என்று நினைத்துக் கொண் டேன். ஆம்! "வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகள் ஒருக்காலும் ஒழிந்து போவதில்லை"*

# நான் மிகவும் நல்ல ஒரு தருணம் அனுபவித்துக் கொண்டேயிருந்தேன்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து